கோலாலம்பூர், ஆக. 31- கோலாலம்பூரிலுள்ள ஜின்ஜாங் உத்தாரா தம்பாஹானில் இந்த ஆண்டு மண் உள்வாங்கியதால் தோன்றிய குழியை மூட இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது குறித்து அங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

2021இல் முதன்முறையாக குழி தோன்றியபோது கோலாலம்பூர் மாநகர மன்றக் குத்தகையாளர் அதனைச் சீரமைத்தார் என்று பொதுநலத் தொண்டர் இ போ பின் கூறினார்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஜாலான் ஜின்ஜாங் செத்தியா 7இல் தோன்றிய குழி 2 மீட்டருக்கு மேல் ஆழம் கொண்டதாக இருக்கிறது. ஆனால், இது பற்றி புகார் செய்தும் அதனை மூடுவதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

முதல் குழி ஏற்பட்ட 3 ஆண்டுகள் கழித்து அதே இடத்தில் மீண்டும் குழி தோன்றியிருப்பது கவலை அளிக்கிறது. ஏதாவது அசம்பாவிதம் நிகழ்வதற்கு முன்னதாகவே கோலாலம்பூர் மாநகர மன்றம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.



## ஜின்ஜாங் உத்தாரா தம்பாஹானில்

# மூடப்படாத குழி

### பொதுமக்கள் கவலை